"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

பூலோகவியாஸன்.

161975
10 JUN 1910
MADRAS.

மாதாந்தரப்பிரசுரம்.

தொகுதி 6.] சென்னை, 1909௵ ஜனவரிமீ [பகுதி 1.

நமது பத்திரிகையின் ஐந்தாவது வருடபூர்த்தியும். ஆறுவது வருடாரம்ப வந்தனமும்.

"பூலோகவியாஸன்" என்னும் மகுடத்துடன் 1903௵ அக்டோபர்மீ முதல் வெளியிடப்பட்டது. கடந்த வருடத்துடன் தனது 5வதுவருடத்தைப் பூர்த்திசெய்துக்கொண்டு, இப் புதுவருடமாகிய 1909௵ ஜனவரிமாதத்தையே முதல்மாதமாக்கொண்டு அன்பர்களனைவருக்குஞ் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த ஐந்துவருடங்களாக இப்பத்திரிகை நமது அன்பார்ந்த ஆதரணைக் கர்த்தாக்களின் அத்தியந்த அநுசரணையினால் நன் நடந்து தீர்ந்தது. அவ்வாறே கைபொப்ப நேயர்கள் தந் தம் சந்தாக்களைச் செலுத்தி இனிது நடக்க உதவி புரிந்தார்கள். ஆதலின் நம்பாலன்புள்ள யாவருக்கும் வந்தனஞ்செலுத்தி இவ் வாறுவது வருடத்தையாரம்பிக்கவேண்டியது கடமையாகையால் புதுவருட வந்தனஞ்செலுத்துகிறோம்.

சுப்ரதீபப் பெருங்கருணைக் கடவுள் கிருபையுண்டாவதாக.

1- கொடைவண்மையுடைய ஆதரணை கர்த்தர்களுக்கு நன் [illegible]தலான வந்தனஞ் சமர்ப்பிக்கின்றனம்.

2- பத்திரிகா நேயர்களாகிய கைபொப்ப நேயர்களுக்கு வந் தனஞ் செய்கின்றோம்.

3- இவர்களுடன் நமது பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களை அப்போதைக் கப்போது உதவி புரிந்துவந்த விஷயதானர்களாகிய வித்வ மணிகளுக்குப் பன்முறையும் வந்தனஞ் செலுத்தா நின்றேம்.

4- தாங்கள் வாங்குவதன்றி வேறு சில அன்பர்களையும் வாங்கச்செய்த வர்களுக்கும் வந்தனஞ் செலுத்து கின்றேம்.

5- ஆதரணைகர்த்தராக விருந்து நன்குதவி செய்வதாகச் செப்பி ஆளே தலைமாறி நின்றொளித்த உண்மையாதரணை யுள்ளாருக்கும் வந்தன மளிக்கின்றேன்.

6 பத்துகாப்பி 15 காப்பிகள் தருவித்து இதோ அதோ என்று பணத்துக்காக ஏமாற்றிய பெரியவர்களுக்கும், நம்பிக்கைகாட்டி பத்திரிகைபெற்று ஒரு தம்பிடியேனுங் கொடாமல் முழு மோசஞ் செய்த அரியவர்களுக்கும் வாழ்த்து வந்தனஞ் செய்கின்றனம்.

V. P. P. அனுப்ப எழுதி திருப்பிவிட்டு வேடிக்கை பார்த்த வீராதி வீரர்களுக்கும் மிகவும் வந்தனம், மிகவும் வந்தனமே.

161975

அத்துவித சித்தாந்தம்.

(முன் தொடர்ச்சி.)

இனி "நித்யோ நித்யானாம்" என்பதைநித்யோ அநித்யானாம்எனப்பிரிப்பதுகூடாது. நித்யோ நித்யோனும் எனவே பிரிக்கவேண்டுமென்கிறார்கள். நித்யமென்னு ஒருபொருளை உரைப்பின் மற்றவையனித்யமெனவாகாவோ? ஜீவனும் ஈசனும் உலகமும் நித்யமேயாயின் அநித்யமெவை? அல்லதெது? அநித்யமின்றியே நித்யமெனும் பெயர்வந்ததோ? யாவும் நித்யமேயெனில் நித்யமாகிய ஜீவர்கள் நித்யமாகிய ஈசனையும் உலகத்தையும் பத்தில் பதினொன்றாகமதியாது உயர்த்தித்தாழ்த்திக்கொள்ளவேண்டியகாரணம்யாது? நித்யத்திலும் பெரியது சிறியது என்கிறபேதமுண்டோ? நித்யமாகிய ஜீவர்களுக்கு கர்மமும் ஜனனமரணமும் பிராப்தமானவிதமெவ்வாறு? ஒரு நித்யன் தன்னைப்போன்றமற்றொரு நித்யனைதன்னிலுஞ் சிறந்தோனென வேற்றுக்கொள்ளுதல் மூடமோ தெளிவோ? ஜீவன்நித்யமாயிருப்பது சுபாவமென வறிந்தவரும் அவர்கள் முன்னோர்களும்கைங்கரியஞ்செய்தேநித்யபதவியடைய வேண்டுமென மூடக்கொள்கையில் முயன்

ஸ்திரீகளுடைய அந்தஸ்தும் அதிகாரமும்.

ஆதியில் ஷட்ருபா என்கிற ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டாள். நமது சாஸ்திரக்காரராகிய மனு எக்காலத்தில் உலகத்தில் தோன்றினாரோ அதேகாலத்தில் அவளும் உலகத்தில் பிரவேசித்தாள் அவள் மனுவின் பெண்ஜாதி அவரைவிட்டு இணைபிரியாமல் இருப்பாள் எல்லசங்கதிகளிலும் அவருக்கு ஒரு மந்திரியைப் புத்திசொல்லுவாள். வீட்டில்யாதொரு நடவடிக்கையும் அவளுடைய சம்மதமும் அனுமதியும் இல்லாமல் நடத்தப்படவில்லை அவர்களுடைய புத்திரிகளிலொருத்தியாகிய தாவாறுதி என்பவள் கல்வியில் தேர்ந்தவள். மிகவுமனைவிக்கு வேண்டிய நற்குணங்களையெல்லாம் உடைத்தாயிருந்தாள். அவள்வீட்டிற்கு அவள்தான் எஜமானி. அந்த வீடுவெகுமேன்மையாயிருந்தது. தேவர்கள்கூட அவளைப் பார்த்துப்பொறுமைப்பட்டார்கள். பூர்வீககாலத்தில் ஸ்திரீகள் உன்னதபதவியிலிருந்தார்கள் என்பதை ரூபிக்கும் பொருட்டு மனுஸ்மிருதியில்ஆதாரமுள்ள அதிகாரத்தில் ஸ்திரிகள் தங்களுக்கு இஷ்டமிருந்தால் விவாகம் செய்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்கிறசுதந்தரத்தை உடைத்தாயிருந்தார்கள் ஒரு க்ஷத்திரியன் குமாரத்தியாகிய சுலபையென்பவள் தகுந்தநாயகன் அகப்படாததினால் தபசுசெய்யதலைப்பட்டுஉலகத்தைத் துறந்து சந்நியாசியானாள். அவள் கல்வியில் தேர்ந்தவள் ஒரு அரசனுடன் மதவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்து முடிவில் அவனைப்பார்த்து இவ்விதமாய்க் கூறினாள். "இன்னமும் நீர் அக்கியானத்திலும் பாவத்திலும் முழுகியிருந்தபோதிலும், அவைகளினின்றும் நீங்கிவிட்டதாய்த் தப்பானஅபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறீர். நான் உம்முடைய க்ஷேமத்தில் கண்ணுடையவளாதலால் நீர் வீண்மனோராச்சியத்தில் காலத்தைப் போக்குகிறீரென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்தக்கதையால் அக்காலத்தில் மனிதர்களும், ஸ்திரிகளும் சமமான சுதந்தரங்களை உடைத்தாயிருந்தார்களென்பதைக் காட்டுகிறது" சாவித்திரி என்பவளும் கல்வியில்மிகுந்ததேர்ச்சியுடையவள். தான் தகுந்த கணவனை எளிதில் கண்டுபிடிக்கக்கூடாமல் அந்நிய தேசங்களுக்குச் சென்று கடைசியாய் ஒரு அடைக்கலம்புகுந்தோனுடைய புத்திரனை நிச்சயித்தாள். அவள் பிதா அவள்பொருக்கியெடுத்தவாலிபன் ஒரு வருஷங்கூடப் பிழைத்திருக்கமாட்டான் என்று தெரிந்துகொண்டு தன்னால் கூடியமட்டும் அவனைக்கல்யாணம் செய்துக் கொள்ளவேண்டாமென்று தன் புத்திரிக்குப் புத்திசொல்லியும் அவள் அதற்கு உடன்படவில்லை அவள் அவனை விவாகம் செய்துகொண்டு அவனைச்சாவினின்றும் மீட்கிறதற்கு சக்தியுள்ளவளாயிருந்தாள். வடதேசத்தில் அவளுடைய சரித்திரம் எங்கும் பரவியிருக்கிறது. அத்தேசங்களில் கன்னிகைப்பெண் பெரியவர்களுக்கு வணங்கினால் "நீ சாவித்திரி" ஆகக்கடவாய் என்றுவாழ்த்துவார்கள். போஜராஜனுடையவரண்மனையிலிருந்த அநேகம் பண்டிதர்களில் ஒரு ஸ்திரியும் இருந்தாள். இனி ராமர் தான்

காட்டுக்கு வனவாசம் போகும்போது அயோத்தியிலேயே இருக்கும்படி யாய்க் கேட்டதற்குச் சீதாதேவி அம்மாள் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் ஒரு பெண்ணுக்குகணவனே துணைவன்; கணவனே ஞானியென்று சொன்னால் இந்த நூறுவருஷகாலமாய் மஹாராணி அகல்யாபாய்ஹோல்கார் என்னும் பெயர் உலகத்தில் எல்லாருக்கும் தெரிந்ததாயிருக்கிறது. ஸர்ஜான் மால்கம் என்பவர் ஒரு புஸ்தகத்தில் அந்த அம்மாளைப்பற்றி இவ்விதமாய் எழுதியிருக்கிறார். “இராஜாங்க விஷயங்கள் அதிக குழப்பமா யிருக்கும்பொழுதும் ஜனங்களுடைய மனது சஞ்சலப்பட்டிருந்துகொண்ட காலத்திலும் அவள் அநேகம் நாள் பயிரங்கமாய்க்கச்சேரிசெய்தாள் அவள் இராஜ்ஜியபாரம் செய்தபொழுது சொற்பதீர்வை விதிப்பதைப் பற்றி யிருந்த கவனமுள்ளவளா யிருந்தாள். ஒவ்வொரு பிராதையும் நேரில் விசாரிப்பாள். எல்லாரும்தடையின்றிப் போய்க் குறைகளைப்பற்றி முறையிட்டுக் கொள்ளலாம் இது நிற்க.

ஹிந்து சாஸ்திரம் மனிதர்களுக்கு அனுகூலமா யிருப்பதாயும் ஸ்திரீகளை அவர்களுடைய ஆயுள் காலெல்லாம் மனிதர்களுடைய அடிமைகளா யிருக்கும்படி சொல்லுகிறதென்றும் அநேகம் கனவான்கள் அபிப்பிராயப் பட் டிருக்கிறார்கள். அது தப்பிதம் என்பதை ரூபிப்பதற்காக மேற்சொல்லிய ஸ்திரீகள் கீர்த்தியே சாலும். உலகத்தில் எப்பொழுதும்பரவியிருக்கும்படி மிகவும் மேன்மையாய் ஸ்திரீகள் செய்து முடிக்கவேண்டிய கடமைகளை முடித்திருக்கிற படியால், அவர்களை அடிமைகள் என்று நாம் சொல்லத் துணிவோமானால் அந்த அடிமைத்தனம் இக்காலத்தியசுயேச்சையைப்பார்க்கிலும் ஆயிரமடங்கு மேன்மையுடையது என்று சொல்லலாம். தோ தௌர்பார்க்கியத்தினால் இந்தியாவில் பாண்டவர் காலத்திற்கு பிற்பாடு ஸ்திரீகள் தங்கள் சுயேச்சையை இழந்துவிட்டார்கள். 10 - நூற்றாண்டுகள் வரையில் அவர்களுடைய நிலைமை நிரம்பக் கேவலமாயிருந்தது. பாரத வருஷத்தில் அநேகம் பெயர்பெற்ற ஸ்திரீகள் இருக்கிறார்கள். ஔவையாருடைய நூல்களும் அவளுடைய நிர்தோஷமான குணங்களும் அக்காலத்து இருடிகளுக்கும் அவளுக்குப் பின்னால் வருகிறசந்ததிகளுக்கும் நற்குண நற்செய்கைகளைக் கற்பித்துக் கொண்டிருக்கின்றன. தமயந்தி ஓர் கீர்த்திபெற்ற ராஜஸ்திரீ. அவளுடைய குணங்களுக்காக அவளைப்பற்றி அநேகம் கவிகள் பாடியிருக்கிறார்கள். இக்காலத்திலேயே மேற்குத் திக்கில் ஒரு ஆரிய ஸ்திரீ உலகத்திற்கெல்லாம் நீதி கற்பிக்கிற ஓர் விளக்குப் போல் விளங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் சிறுபெண்ணா யிருந்தபொழுது கல்விகேள்விகளால் நன்றாய்த்தேர்ந்தவள். கல்யாணம் செய்துகொள்வதில் மிகுந்த புத்திசாலித் தனத்தைக் காட்டினாள். கணவனிடத்தில் வெகு பிரியமுள்ளவள்.. தற்காலத்தில் பிள்ளைகளிடத்தில் பக்ஷமுள்ளவளும் பிள்ளைகளைத் தகுந்த மார்க்கத்தில் கொண்டுவரத் தக்கவளாயும் இருக்கிறாள். அவளுடைய நற்குண நற்செய்கைகளைச் சொல்லித்

தொலையாது. அவள் ஸ்வாமியுடைய பக்தியுள்ள அடிமை அதிகயுக்தி புத்தியை உடைத்தாயிருக்கிறவள். எப்பொழுதும் தொந்தரவு கொடுக்கத்தக்க ஜனங்களின் ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு வருகிறாள் ஆனால் ராணுவ பலத்தினால் மட்டும் அல்ல ஆனால் அந்த ஜனங்களுடைய பிரியத்தைச் சம்பாதிப்பதில் தன்னுடைய சுதேசத்தில் சமாதானமாய் இராஜ்ஜியபாரம் செய்கிறாள். அந்நிய தேசங்களிடத்தும் சண்டை சச்சரவு இல்லாமல் பாதுகாத்துவருகிறாள் எப்பொழுதும் ஸ்வாமியுடைய கிருபையையே நம்பினவள். அவளுடையபெயர் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. விக்டோரியா மகாராணியென்னும் பெயரைச் சொன்னாலும் கேட்டாலும்அளவிறந்த சந்தோஷம் உண்டாகிறது. இந்தியாவில் அந்தச் சமயம் சொல்லதகுந்த ஸ்திரி மற்றொருத்தி உண்டு. கம்பெஸார் நாட்டு மகாராணி சொர்ணமாயி ஒருமேன்மையான ஆரியஸ்திரி.இக்காரணங்களால்இந்தியாவில்ஸ்திரிகள்புருஷர்களைப்பார்க்கிலும்தாழ்ந்தவர்கள் அல்லவென்றஸ்டஷ்டமாய்ப் படுகிறது. குடும்பத்தில் அந்தஸ்திரி மேன்மையான பதவியையுடைத்தாயிருந்தாள். இராஜாங்க விஷயத்தில் மாத்திரம்தான் அவளுடைய அதிகாரம் சில சமயங்களில் குறைக்கப்பட்டது அவள் மற்ற காலங்களில் நாடுகளை ஆண்டிருக்கிறாள். இராஜாக்களுக்குப் புத்தி சொல்லுவாள் சண்டையில் சேர்ந்து சைனியத்தை நடத்துவாள் வீட்டில் அவள் ஒருவருக்கும் கீழ்ப்பட்டவளல்ல பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்வரையில் அவள்தான் உபாத்தியாயர். அவர்களுக்கு ரகசியம் வைத்துக்கொள்ளும் சக்தியில்லாததினால் வேதத்தின் ஆதியையவர்களுக்குச் சொல்லவில்லை. ஒரு மனிதனுக்கு மதத்தில்பக்தியுண்டுபண்ணுவதற்கு அவள் ஒருபான்மை காரணம். எக்காலத்தில் ஆரியர்கள் தங்கள்ஸ்திரீகளையவமதித்தார்களோ அப்பொழுதுதான் அவர்கள் மெலிவையடைய ஆரம்பித்தார்கள் மறுபடியும் நாம் நம்முடைய ஸ்திரிகளைத் தகுந்த நிலைமையில் கொண்டுவர முயன்றால் நாம் முன்போல உன்னதபதவிக்கு வருவோம்,

---

ராஸிலஸ்

ஆங்கிலமொழி பெயர்ப்பு.

“வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர் என்பது போல, மனக்குரங்கு சொல்வதெல்லாம் மெய்யென்று மதிகெட்டுச் செவி கொடுத்து, ஆசை எனும் பேயை ஆவலாய்த் தொடர்ந்து, வயசில் குறிக் கொள்வதை வார்த்திகத்தில் சாதிக்கலாகு மென்றும், இன்றுள்ள குறை நாளைத் தீருமென்றும் எண்ணி யிருப்பவர்களே, அபிஸினிய சக்கரவர்த்தி மைந்தன் ராஸிலஸ் என்பவனுடைய சரித்திரம் சொல்லுகிறேன், கவனமாய்க் கேளுங்கள்.

பராக்கிரமசாலி ஆகிய அபிஸீனிய சக்கரவர்த்திக்கு நான்காவது புத்திரன் ராஸிலஸ் என்பவன். அவன் ஆணை செல்லும் எல்லைக்குள் நதியரசு என வியக்கத்தரும் நீல்நதி உற்பத்தியாகி நான்கு திக்கும் பிரவாகிக்க, எகிப்தில் திரளாய் விளையும் தானியாதிகள் அக்குள்ளோர் செலவிற்குக் கண்டு மீந்தன. மீந்தவை வெகு வெகு தேசங்களுக்கு அனுப்பப்படும்,

உஷ்ணசக்கரத்து ஏகாதிபதிகள் தங்கள் புத்திரர் புத்திரிகளைப் பட்டாபிஷேக தினம் கிட்டுந்தனையும் வெளிப்படவிடாமல் அந்தரங்க அரண்மனை ஒன்றிற் சிறையிருத்துவது வழக்கம். தலைமுறைதோறும் தடையற நடக்கும் இவ்வழக்கம் தொன்றுதொட்டு உள்ளது, இவ்வாறே மேற்சொல்லிய அபிஸீனிய ராஜகுமாரன் ராஸிலஸும் சகோதரர் சகோதரிகளும் அவ்வந்தரங்க அரண்மனை வாசஞ் செய்தார்கள்.

தங்கள் புத்திரர் புத்திரிகள் சஞ்சரிக்கத் தகும் இடமெனப் பூர்வகாலத்தில் அபிஸீனிய அரசர் புத்திபூர்வமாய்க் குறித்திருந்தது அம்ஹாரா ராஜ்யத்தில் நாற்றிசையும் மலையரணுள்ள அகன்ற பள்ளத்தாக்கு ஒன்று. அம்மலைச் சிகரங்கள் ஓங்கிவளர்ந்து பள்ளத்தாக்கின் மத்தியில் விதானம் போற் கவிந்திருந்தன. அதனுள்ளே செல்லஒரே ஒரு வழியிருந்தது. அவ்வழி மலையடி குகைவழி அது எந்நாளும் இயற்கையாய் உள்ளதோ, இடையில் மனுஷர் கைத்தொழிலால் அமைந்ததோ என்று அறியாமல் எல்லோருக்கும் வெகு காலம் சந்தேகாஸ்பதமாயிருந்தது. புறத்தில் அந்தக் குகைவழியின் வாய் தெரியா வண்ணம் காடு அடர்ந்து படர்ந்திருக்கும். பள்ளத்தாக்கின் அகத்தில் குகைவழியின் வாயில் யந்திர சக்தியாலன்றி ராக்ஷதர் பலத்தாலும் அசையாத பிரமாண்டமான இரும்புக்கதவு இட்டிருந்தது. அது பூர்வ கம்மியர் கைவேலை.

நாற்றிசையும் மலையினின்று விழும் அருவியால் ஆகிய சிற்றாறு அநேகம் பள்ளத்தாக்கு எங்கும் பரந்துசென்று மத்தியில் ஒன்றாய்க் கலந்து ஓர் ஏரியாகும். நீர்வளம் ஒருநாளும் குன்றாத செழுநிலமுழுதும் கண்ணுக்குப் பசுமையான பயிர்பச்சை செடிகொடி விருட்சம் செழித்து உண்டாயின. அந்த ஏரியில் நானாஜாதி மச்சமும் விர்த்தியாயின. நீரில்நீந்தும் இயற்கையுள்ள அன்னம் நீர்க்காக்கை, சக்கரவாகமுதலிய புள்ளினம் அனைத்தையும் அதிற்காணலாம். ஏரி நிறைந்து வழிந்தோடும் நீர் வடக்கெல்லையாயுள்ள மலையடிப் பள்ளத்தில் விழும். அந்தப் பள்ளமோ சாமானியமல்ல, அடிதெரியாமல் ஆழ்ந்து இருள்மயமாயிருக்கும் அந்தக் கிடுகிடு பாதாளத்தில் வேகமாய் இறங்கும் ஜலப்பிரளயம் நிறுதிட்டமான கற்குவை ஒன்றினின்று மற்றொன்றில் மடமடென்று விழும் ஒலியைக் கேட்கச்செவி அதிரும். நீர் இறங்க இறங்க ஒலி குறைந்து, வெகு தூரத்திற் சேரும்பொழுது நிதப்தமாயிருக்கும்.

மலைச்சாரல் எல்லாம் மரச்செறிவு ஆற்றங்கரை எல்லாம் அழகிய பூந்திரள். அடிக்கிற காற்றில் செடிகளின் தழை கிளை சிறிது அசைய, இலவங்கம்-ஏலம்-கற்பூரம்-ஜாதிக்காய்-தக்கோலமுதலிய வாசனைத் திரவியங்கள் மலையினின்று பலபலென்று விழும். வருஷம் பன்னிரண்டு மாசமும் கனிவர்க்கம் குறையறத் தரையில் உதிரும். மனுஷர் கைவசப்பட்டுப் படிந்தவைகளும், படியாதவைகளும், புல் பூண்டு மேய்பவைகளும், தழை குழை கடிப்பவைகளும் ஆகிய நானாஜாதி விலங்குகள் அந்த விஸ்தாரமான பள்ளத்தாக்கில் எங்கும் அச்சமற்று உலாவித்திரியும். மலைமதில் சூழும் அந்நாட்டில் சஞ்சரிக்கும் அவைகள் சிங்கம்-கரடி-புலி-சிறுத்தை-செந்நாய் முதலிய துஷ்ட வனவிலங்குகளால் ஆபத்து உண்டாமென்று அஞ்சி அதிர்ந்து பதுங்க நிமித்தம் இல்லையே, ஆட்டுமந்தைகளும் கன்றுகாலிகளும் திரளாய்க் கூடி மேயும் பசும்புற்காடு ஒருபக்கம் மான்-மரை-முயல் முதலிய விலங்குகள் மகிழ்ச்சியாய்த் துள்ளிக் குதித்து வேகமாய்ப் பாயும் காட்டிடை வெளிநிலம் ஒருபக்கம், மலையில் வெள்ளாட்டுக் குட்டிகள் உல்லாசமாய்த் துள்ளிவிளையாடும், வஞ்சமனமுள்ள வானரங்கள் மரக்கிளைகளில் மகிழ்ச்சியாய்க் குதித்துத்திரியும், மந்தகுணமுள்ள மதயானை கிளை படர்ந்த மரநிழலில் படுத்திருக்கும். உலகத்தில் ஒன்றுக்கொன்று விகற்பமாயுள்ள சமஸ்தமும் அங்குண்டு. மனுஷருக்கு இகத்தில் இயற்கையான நற்பேறு அனைத்தும் அங்கே திரண்டிருந்தன. தீங்குஎன்பது ஒன்றுந் திர்ப்பாய் அங்கில்லை.

அவ்வகன்ற செழும் பள்ளத்தாக்கில் சஞ்சரித்த மனுஷருக்கு அன்னவஸ்திராதிகளுக்குரிய சகலமும் உற்பத்தியாயின. புத்திரர் புத்திரிகளைக் கண்டு கொண்டாடச் சக்கரவர்த்தி வருஷம் ஒருமுறை அங்கு எழுந்தருளுவார். அந்தப் பெருநாளில் வையகத்தை ஆளும் முடிமன்னர்பெருவாழ்விற்கு உரிய வைபவங்கள் யாவும் அங்குண்டு. பரிஜனம் சூழச் சக்கரவர்த்தி மலையரணுள்ள அந்தப் பள்ளத்தாக்கிற் பிரவேசிக்க, இருப்புக்கதவு யந்திரப்பிரயோகத்தால் திறக்கப்படும். அச்சமயத்தில் நாதகீத காலக்ஷேபம் நடக்கும். ஏகாந்த வாழ்வுக்கு இனியதும், அவதானம் ஒழிந்த நேரத்திற்கு விநோதமும், அலுப்பு நீங்கவிறைவிற் பொழுதுபோக்கும்உபாயமும் ஏதேதென்று அங்கிருக்கும் அத்தனைபெயரையும் தனித்தனி அழைத்துச் சக்கரவர்த்தி கேட்டு, அவரவர் மனதிற்கு இதமான விநோதத்தை ஏற்குமாறு செய்யக் கற்பிப்பார். இம்மங்கல வருஷோற்சவத்தில் யாவரும் ஆனந்த பூர்த்தி யடையும்பொருட்டு நடனமுதலிய வித்தைகளை நால்வருக்கும் வியப்பாகத் தினம் ஒருவண்ணம் சாதிக்கவல்ல நிபுணர்கள் அழைக்கப்படுவார்கள். யாழ்வல்லோர் முறுக்காணிகளை இறுக்கிச் செவிக்கு இனிய விதவித நாதம் பிறக்க யாழ் வாசிப்பார்கள். நாடகர் அசைந்து விரைந்து நடனம் செய்வார்கள். அந்த நாதகீத நடனசாலைக்குப் போயிருக்கும்

ராஜகுமாரருக்குத் தாம் ஏகாந்தமாய் வாழ்வது எவ்வளவும் நிர்பந்தமாகத் தோன்றாதே. சகல நற்பேறும் பெற்று அனுபவித்து அலுப்புற்றிருப்பவர்களுக்குத் தினம் ஒரு வித விநோதம் காட்டிச் சிந்தைமகிழ்விக்கும் வித்தையர்கள் எவ்வளவு சாமார்த்தியவான்களாயிருப்பார்கள். இந்த அபூர்வத்தைமுடையோரன்றி இதரமானவர்கள் அங்கே போக இடம்பெறுவதில்லை. மேற்சொல்லிய காலக்ஷேபங்கள் எட்டுத்தினம் இடையறாது நடந்தேறும். அவைகளை நூதனமாய்ப் போய்க் கண்டுகேட்டு இன்புற்றவர்கள் அவ்வின்பத்தையும் அவ்விடத்தின் அரணையும் நினைந்து எந்நாளும் அங்கிருக்கஇடம் பெறுவதே இகத்தில் ஈடிலா முத்தியென்று எண்ணுவார்கள். சில காலம் அங்கிருந்து வெளிப்படுமவர் மீண்டும் உட்செல்லவிதி இல்லை. அதனால் அங்கே நாட்படஇருப்பது இன்பமோ துன்பமோ வென்றறிவது அசாத்தியம். மேல்மொழிந்த வாறே வருஷத்திற்கு வருஷம் அங்கே நடந்துவரும் இன்ப காலக்ஷேபமும் நூதனம், சிறையிருந்து வாசடிப் புகும் மனுஷரும் நூதனரே.

கமலாவதி.

(முன் தொடர்ச்சி.)

இவ்விதமாய் எழுதிபோஸ்டில்போட்டுவிட்டான். மறுநாள்சுவேதசந்திரனுக்கு கடிதம் கிடைக்கப்பார்த்து அதற்கு முத்தந்தந்து தன் மகனுயிர்பெற்றிருப்பதற்காக மகிழ்ந்துபத்துக்கப்பல்பொருளைச்சேர்த்துமேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பினான். அது ஆறுநாள் மதனனுக்கு வந்தது. அரசகுமாரன் மனமகிழ்ந்து அப்பொருள்களைத் தானிருக்கும்பங்களாவிற் குவித்துக்கொண்டு மறுநாளுதயத்தில் வேலைக்காரரைவிட்டு ஒரு கப்பல் பொருளை வாரிப்போட்டான். அது சிறிதும் நிறைந்திலது. அரசகுமாரன் அம்மணிமாடத்தை வெட்டிப்பார்த்தபோது சிறிதாழத்திற் பொருளிருப்பதாய் காணப்பட்டது. பின்னும் இரண்டுகப்பல் பணத்தை யள்ளியோரே காலத்தில் கொட்டினான். அது முன்போலவேயிருந்ததால் ஆச்சரித்துஅடியில் சுரங்கமுண்டாவென அங்கிருக்கும் கிழவியைகேட்டான். அதற்கவள் தனக்கொன்றுந்தெரியாதென்று சொல்லிமுடித்தாள். பாட்டீ அம்மணிமாடத்தை சோதித்துப்பார்க்கலாமாவென, கிழவி அப்படிசெய்வதற்கு எனக்கும் உனக்கும் உத்திரவுகிடையாதென்றாள். பின்னர், மதனசொரூபன் மனமுடைந்து எப்படியேனுமாகுக, அடைந்தால் ஜோதிமதியை அடைவது அன்றேல் நம் உயிர் துறப்பதேயுசிதமெனத் தீர்மானித்து, மிகுதியாகிய யேழுகப்பல்பணத்தையுங்கொண்டுபோய்க்கொட்டினான் (அவ்வளவும் ஆற்றில் கரைத்தபுளிபோல் பயனின்றிப்போயிற்று.

மதனசொரூபன் இனிவாய்ப்பேசிப் பயனில்லையென்று அவ்விடம் விட்டு தான் வசிக்கும் பங்களாவுக்குச்சென்று துக்காக்கிராந்தனாய், நெடுநேரம் வருந்தியிருந்து இனி நம்சமர்த்தால் வெல்வதரிது. நமக்குஉண்மையான தந்தைகுருமற்றெல்லாமாய் விளங்கும் பார்வதி சமேதனாகிய பரமசிவமே துணைவேண்டும். அக்கடவுள் கிருபை செய்யும்படிகாட்டிற்சென்று கட்டைவெட்டி அதிற் கிடைக்கும் பணத்தில் பாதியென் வயிற்றுக்கும் பாதி மணிமாடத்திற்கும் போட்டுவருகிறேன். பத்துக்கப்பல் பணத்தையேப்பமிட்டது காலணாப்போட்டால்நிறையப்போகிறதா—இல்லை. யான் படுங் கஷ்டத்தைக்கண்டு கடவுள் மனமிரங்கி ஜோதிமதியை யெனக்கு மனைவியாகச் செய்விப்பாரென்னும் நம்பிக்கையால் இதோ, அன்னவருடைய பாதகமலங்களை மனமாற வணங்கிக் கட்டைவெட்ட செல்கின்றேன் என்று புறப்பட்டான். விரசைநகரிலுள்ள பெருங்காட்டில் புகுந்தான். ஆங்குள்ள பலமலைகளைக்கண்டான். அவற்றில் மிகநீண்டும்அகன்றுமுள்ள பரத்துவாசரமலையிசையேறினான் யெங்குபார்த்தாலும் கணக்கில்லாத பல சந்தன விருக்ஷங்கள்எதேஷ்டமாயிருந்தன. யாதொன்றும்யோசியாமல் தன்கையில் பிடித்திருந்த கோடாரியால் ஓர் சந்தன விருக்ஷத்தை சேதித்து, நாருன் கொடியால் கட்டாகக் கட்டி தூக்கமுடியாமல் அவஸ்தையடைந்து, தலைமேற்சுமந்து தட்டு தடுமாறி, அன்னவன் மலையை விட்டிறங்கும்போது யார்மனந்தான் குழம்பாது. மதனன் மற்கடம்போல் பிடியைவிடாது கொண்டுவந்த சந்தனக்கட்டையை ஒரு வர்த்தகன்நான்கு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டான் அதிலிரண்டு ரூபாய் மணிமாடத்தில் போட்டு மீதி 2-ரூபாயை கொண்டுவந்து சமயல் செய்து 30 - பரதேசிகளோடு தானுமுண்டு பின்னர் மறுநாளும் அக்காட்டிற்சென்று அங்குள்ள மரங்களைக்கண்ணுற்று இவைகளை நமக்காகவே கடவுள் சிருஷ்டித்தனரோவென மகிழ்ந்து அன்று பட்டகஷ்டத்தால் பசும்புல்லில் தலைசாய்ந்து சயனித்தான்.

மறுநாள் சூரியோதயத்திற்கு விழித்துக்கொண்டானெனினும்நேற்று பட்ட துன்பத்தால் கை கால்களெல்லாம் நோக்காடுண்டாயிற்று ஆயினுமதற்காக சோம்பி நெடுநேரம் படுத்திராமலெழுந்து ஓர் சுனையில் வயிறு நிறைய ஜலமருந்திய பின்னர், விறகைவெட்டி தலையிற் சுமந்து வேறோரிடஞ் சென்றான். அவ்வழியிற் செல்வோரெல்லாம் விறகுசுமந்துசெல்பவனுடைய அழகையும் முகவசீகரத்தையும் கண்டு ஆச்சரித்து, அந்தோ இவ்வளவு அழகுடைய புருஷனைப்படைத்து அவன் தலையில் கட்டைசுமக்கவைத்தது கொடுமை கொடுமை, மிகக்கொடுமையென அவ்வீதியில் நின்றிருந்த ஸ்திரீகள் எண்ணினார்கள், அரசகுமாரனுடைய அழகையும் யௌவனத்தையையும் கண்ட ஓர் பிரபுவானவன் அவ்விறகுக் கட்டைவாங்கிக் கொண்டுப் பத்துருபாய் கொடுத்தனுப்பினான். அரசகுமாரன் அதனைப்

யெபற்றுச் சென்று ஐந்துரூபாயை அம்மாடத்திற் போட்டு மற்றரூபாயை முந்தின நாள்போல செலவுசெய்து சுமார் 50-பரதேசியோடுதானுமுண்டு மறுநாள் மலைமிசை யேறினன். இவ்வாறு பதினெட்டு நாள்தனையும் செய்திருந்தான். பதினெட்டாநாள் அம்மலைமிசை நடந்த ஓரதிசயத்தைக் கூறுகிறேன்,

(இன்னும் வரும்.)

காப்பு.

குறள் வெண்பா.

மனப்பழி பஞ்சகத்தை மாண்புடைய நாதன்
வனசத்தாள் வைப்பேன் வரைந்து.

நூல்.

எண்சீர் விருத்தங்கள்.

அடக்கொணுப் பொருளே யறிஞரின் மருளே
யாராப் பிணியே யகலாச் சனியே
மடவராட்போல மருட்டுஞ் சைல
மந்தியே கொடிய மனமே தடிய
வடவை நீய விலங்கே பேயே
வறிஞ னென்னை வாட்டு முன்னைக்
கொடிய புள்ளுக் கிறையாய்க் கொள்வன்
குணநிதி யவர்தன் கொள்கை யாலே. 1.

ஆணுய்ப் பிறந்த வெள்ளைச் சிறந்த
ஆயுள் வீணு யழிக்க எணுய்
நாணங் கெட்டு நன்றியை விட்டு
நன்வழி யின்று தீவழி சென்று
சினை ருறவு கொண்டு மகிழ்ந்து
சிஞ்சமும் பரனை நெஞ்சி லணியா
தாண்மை யேகச் செய்திறைமனமே
யழிப்பேனுன்னை யாண்டவன் தயையால் 2.

தயைசெய் தோரை யெண்ணு வீரைச்
சாலவு முட்டிச் சற்குண மோட்டிக்
கயவரைக் கூட்டிக் கடும்பகை நாட்டிக்
கர்த்தனை மறக்க கல்வியைத் துறக்க
சயத்தைப் போக்கி யபசய மாக்கித்
தக்கோர் தூற்ற தாக்குமென் மனமே
சுயம்பி னருளாற் சிதற வழிப்பேன்
சும்மா விருந்தேன் சொற் கேட்பாயே. 3.

பாவமேயூட்டிப் பழிச்சொலைக் கூட்டிப்
பங்கப் படுத்தி பதர்வழி நடத்தி
யோவச் செய்தின் குயர்வை யழித்தே
யுன்வ சங்கொள்ள வுன்னினை கள்ள
தீவியே சற்று தெரிப்பதைப் பற்று
தியிரிக் கடந்தாற் றியிரத்திலுன்னைக்
காவலன் தலையயாற் சேர்ப்பது நிசமே
கண்டுநீ யுணர்வாய் கத்தை மனமே. 4.

மனமே கெட்ட மங்கையே தட்ட
மதங்கொண் டென்னைவலைதக்கிறாய் பின்னை
கனலைப் போன்ற காமந் தோன்றுங்
காரணஞ் செய்ய காண்கிறாய் வெய்ய
இனத்தை மூட்டிச் சிறியரை கூட்டிச்
செய்கட னொழிய செய்கிறாய் பழைய
முனிவரா விகழ்ந்த மனமே யுன்னை
முற்று மழிப்பேன் முன்னேன் செயலால். 5.

தா. தாமஸ்.

செங்கோல் நிலைத்துச் சீர்பட வேண்டுமோ?

நமது இந்தியாவை யாண்டு நடத்தும் காருண்ய சக்ரவர்த்தியாரின் செங்கோல் நிலைத்துச் சீர்பட வேண்டுமா? என்பது தான் எழுதப்புகுந்தோமே யன்றி யேனையோராகிய மன்னர்களைப் பற்றியும், மற்றும் சக்ரவர்த்திகளைப் பற்றியுமல்ல என்பது திண்ணம். செல்வாக்கிலும் ஞானத்திலும் ராஜவிசுவாசத்திலும் மேம்பட்டதேயமாகிய நமதுஇந்தியாவானதுபற்பல அரசர்களால் ஆளப்பட்டு, வியாபாரஞ் செய்யவந்த வர்த்தகக் கூட்டத்தாராகிய ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் கைப்பெற்று ஆளப்பட்டு வந்து நமது இந்தியா 1858௵ நமது அரியபிராட்டி யாராகிய காருண்ய பீடாதிபதி மகாராணி விக்டோரியா சக்ரவர்த்தினியாருடையநேர் ஆளுகையடைந்து நீண்டநாள் அம்மையாரின் செங்கோலின் கீழ்கொடுங்கோலன்றி ஆளப்பட்டுவந்தது. அம்மையாருக்குப்பின் அவரது புதல்வரும் வேல்ஸ்நாட்டின் பிரின்சுமாயிருந்த (நமது சக்ரவர்த்தியார்) சிம்மாசனம்புக்கி செங்கோல்

நடத்த நேர்ந்தது. கொடுங்கோல் மன்னர்வாழும் நாட்டிற் கடும்புலிவாழுங் காடுநன்றே என்னும் மேதாவிகள்வாக்கினை உய்த்துணர்ந்து துக்கப்படாவண்ணம்நம்மைசக்கிரவர்த்தியார்ஆண்டு வருகின்றார். இனியும் அவ்வாறே செய்வதாகவும் வாக்களித்து மன்னர்களுக்கும் குடிகளுக்கும் அனுப்பிய திருவாக்கினால் தெரியவருகிறது எனினும், இன்னுஞ் செங்கோல் நிலைத்துச் சீர்படவேண்டுமோ என்று இம்மகுடஞ்சூட்டி ஏன் எழுதவேண்டுமென்று ஆலோசிக்குமிடத்து தற்காலத்திய இந்தியாவின் பஞ்சநிவர்த்தியைக்கருதியே எழுதுகின்றோம். இதுவிஷயத்தில் காருண்யம்பொருந்திய கவர்ண்மெண்டாரவர்கள் கவனிப்பார்களென்பது பெரிதும் கோரப்படுகிறது. மன்னுநின் வரப்புயர்க என்று செப்பிய பெரியார்வாக்கு உரியவாக்காய்க் கடைபிடித்து எழுதுகின்றோம். இவ்வரப்புயர்க என்னும் வார்த்தை சாமானிய வார்த்தையல்லவே. வரப்புயர்ந்தால் குடி உயரும் குடி உயர்ந்தால் கோல் உயரும், என்பதல்லவா, கோலுயர்ந்துசீர்பட்டால் தானே, அது மிகவரிய செங்கோல், (அற்றேல் கொடுங்கோலல்லவா) அவ்வாறு செங்கோல் சீர்பட வேண்டுமானால் நமது ராஜாங்கத்தார் எதைக் கவனிக்கவேண்டும், கல்வியிலாக் காவையா? அல்ல, வியாபார விஷயத்தையா? அல்ல. ஒருமுறைவரிக்குஇருமுறைப்போடுவதையா? அல்ல, வரியை உயர்த்தி நெறியைக் கைவிட்டு நம்மைவறியராக்குவதையா? அல்ல. இன்னும்ராணுவச்செலவையதிகரித்துநச் செய்து இந்தியர்களின் தலையை மொட்டையடிப்பதிலா அல்ல, பின்னும் எதுவிஷயத்தில் கவனஞ் செலுத்தவேண்டு மென்றாலோ விவசாய விஷயத்தில் மிக்க ஊக்கமுள்ளவர் களாய்க் குடிகளுக்கான நன்மைகளை யெல்லாம் செய்து வயல்நிலங் களுக்கு விதித்திருக்கும் வரிகளைக்குறைத்து பயிரிடுங்குடிகளைச் சீர்படுத்தி அவ்வேழைகள்பா லன்புபாராட்டி வருவார்களாயின் செங்கோலுயர்ந்துச் சீர்பட்டு நிலைக்குமல்லவா? இக்காரியத்திற்கு இடையூறுண்டானால் குடிகளிளைத்து கோலுக்கு குறைவுண்டாக்கி குடியற்றபோதே கோலற்றுப் போச்சு என்னும் பழமொழிப் படி சக்ரவர்த்தியாரின் ஏகசக்ராதிபத்தியம் பேகிவிடுமே அவ்வாறில்லாமல் செங்கோல் நிலைத்துச் சீர்படவேண்டுமானால் என்னதான் செய்யவேண்டும்?

ஆத்திச்சூடிக் கான திருக்குறள்.

1. அறஞ்செய விரும்பு.

(பொழிப்புரை) தருமத்தைச் செய்தற்கு நீயாசைகொள்ளு.

குறள், 4-ம் அதி. அறன்வலியுறுத்தல் 6-ம் செய்யுள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(பொழிப்புரை) நாமிப்போதிளமைப்பருவமுடையேமாகை யால் இறக்குங்காலத்திற் செய்வோமென்று நினையாது தருமத் தைச்செய்தாலது சரீர மழிந்துபோம்பொழுது உயிர்க்கு அழி வில்லாத துணையாய் உடன் செல்லுமென்பதாம்.

2. ஆறுவது சினம்.

(பொ-ரை) உனக்குள்ளே தணியத்தகுவது கோபம்.

குறள் 31-ம் அதி. வெகுளாமை 3-ம் செய்யுள்.

மறத்தல் வெகுளியை யார்மட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(பொ-ரை) தன்னினுயர்ந்தோரு மொத்தோரு மிழிந்தோரு மாகிய-முத்திறத்தாருள் யாரொருவரிடத்துக் கோபஞ்செய்தா லும், அது தீய நினைவுகளை யெல்லா முண்டாக்கித் தன்னைக்கெ டுக்கு மாதலால்ஒருவரிடத்துங் கோபஞ்செய்தலாகாதென்பாம்.

3. இயல்வது கரவேல்.

(பொ-ரை) கொடுப்பதற்கிசைவதை இரப்பவர்க்கு ஒளி யாதே.

குறள் 23-ம் அதி. ஈகை 3-ம் செய்யுள்.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(பொ-ரை) யான் வறியனென்று இரப்பவன் சொல்லுகின் ற சொல்லைத்தான் பிறரிடத்துச் சொல்லாமையும், அதனைத்தன்

னிடத்துச் சொன்னூர்க்கு இல்லை யென்னுது கொடுத்தலும், ஆகிய விரண்டும் நல்ல குடியிற் பிறந்தவனிடத்துண்டென்பதாம்.

4. ஈவது விலக்கேல்.

(பொ-ரை) ஒருவருக்கொருவர் கொடுப்பதை விலக்காதே.

குறள் 17-ம் அதி. அழுக்காறுமை 6-ம் செய்யுள்.

கொடுப்ப தழுக்கறுப் பான்சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(பொ-ரை) பிறர் பேற்றின்பொறுமை தன் பேற்றையேயன்றித் தன் சுற்றத்தின் பேற்றையு மிழைப்பிக்கு மென்பதாம்.

5, உடையது விளம்பேல்.

(பொ-ரை) உனக்குள்ள ஆஸ்தியைப் பிறரறியச் சொல்லாதே.

குறள் 85-ம் அதி. புல்லறிவாண்மை 4-ம் செய்யுள்.

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(பொ-ரை) உலகத்தாரிகழ்தலறிந்திருந்தும் யாம் நல்லறிவினையுடைய மென்றுதம்மைத்தாமே மதிக்கின்ற மயக்கமேபுல்லறிவாண்மையென்பதாம்.

6. ஊக்கமது கைவிடேல்.

(பொ-ரை) செய்தொழிலில் மனஞ் சோராமையைக் கைவிடாதே.

குறள் 60-ம் அதி. ஊக்கமுடைமை 4-ம் செய்யுள்.

ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

(பொ-ரை) உள்ளக்கிளர்ச்சியை யுடையவனிடத்துச் செல்வந்தானே வழிகேட்டுக்கொண்டுவந்து சேருமென்பதாம்.

7. எண்ணெழுத்திகழேல்.

(பொ-ரை) கணித நூலையும், இலக்கண நூலையும் இகழாமற் கற்றுக்கொள்ளு.

குறள். 40-ம் அதி. கல்வி 2-ம் செய்யுள்.

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(பொ-ரை) அறநூன் முதலியவைகளை யறிதற்குக்கணித நூலும் இலக்கண நூலுங்கருவியாகு மென்பதாம்.

8. ஏற்பதிகழ்ச்சி.

(பொ-ரை) ஒருவரிடத்துப் போய் இரப்பது உனக்குப் பழிப்பாகும்.

குறள். 107-ம் அதி. இரவச்சம் 1-ம் செய்யுள்

கரவாது வந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(பொ-ரை) தமக்குள்ளதை யொளிக்காமற் கொடுப்பவரிடத்தும், இரந்து செல்வமடைதலின் இரவாமையேமிக நன்றாகு மென்பதாம்,

9. ஐயமிட்டுண்.

(பொ-ரை) பிச்சையை இரப்பவர்க்குக் கொடுத்து நீயுமுண்ணு.

குறள். 23-ம் அதி. ஈகை. 7-ம் செய்யுள்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(பொ-ரை) தன்கையி லகப்பட்டதை யாசகர்க் குதவித் தானுமுண்பவன் தனக்குத்தானேவயித்தியனாகையால்பசிநோயவனைச் சேராதென்பதாம்.

10. ஒப்புர வொழுகு.

(பொ-ரை) உலகநடையை யறிந்து அந்த வழியே நட.

குறள் 22-ம் அதி ஒப்புர வறிதல் -3ம் செய்யுள்

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(பொ-ரை)ஒப்புரவைப்போல நல்ல செயல்கள் விண்ணுலகத்து மண்ணுலகத்து மில்லையென்பதாம்,

11 ஓதுவதொழியேல்

(பொ-ரை) நூல்களை வாசிப்பதில் எப்போதும் நீங்காதே

குறள் 40-ம் அதி கல்வி 7-ம் செய்யுள்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(பொ-ரை) பிறர் நாடுகளு மூர்களுந் தன்னுடுந் தன்னூரும் போல உபசரிக்கு; மாதலால் ஒருவன் கல்வியைக் கற்கவேண்டு மென்பதாம்.

12. ஔவியம் பேசேல்.

(பொ-ரை) பொறாமையாகிய சொல்லை ஒரு போதும் பேசாதே.

குறள் 17-ம் அதி. அழுக்காறாமை 3-ம் செய்யுள்.

அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

(பொ-ரை) பிறர் செல்வங்கண்டு பொறாமை கொள்பவன் அறத்தையும், புகழையு மிழப்பனென்பதாம்.

13. அஃகஞ் சுருக்கேல்.

(பொ-ரை) தானியவிலையை அதிகலாபத்திற்காக குறையாதே.

குறள் 21-ம் அதி. தீவினையச்சம் 2-ம் செய்யுள்

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(பொ-ரை) ஒருவன் தனக் கிதத்தைக் குறித்துச் செய்யுந் தீவினை பின்சென்று வருத்துவதினாலே அப்படிபின் சென்று வருத்துத லில்லாத நெருப்பினுங் கொடியதென்று அதற்கஞ்ச வேண்டுமென்பதாம்.

(இன்னும் வரும்.)

சரீரம்.

மானிடர்கட்கு, சரீரம் ஒருவீடுபோலிருக்கிறது ஒரு வீட்டில்உள்ளஸம்ஸாரங்களுஞ் சரீரத்திலிருக்கின்றன விசாரிக்குமளவில் மிக்கச்சம்ஸாரியான குடும்பமேஇக்குடும்பம், எப்பொழுதும் தரித்திரத்திலேயே மூழ்கியிருக்கிறது. தரித்திரமெனில் போகக்கூடியதில்லை, அழியாத் தரித்திரமமைந்திருக்கிறது. இதை எப்படிக் குடும்பமெனலாம்.

இச்சரீரம்இரண்டுகால் நிறுத்தி அதன்பேரில் வீடுபோல் கட்டப்பட்டிருக்கின்றது, இவ்வீடுசலிக்கக்கூடியது. வீட்டில்ஜன்னல்களிருப்பதுபோல காது, கண், முதலியவைகளிருக்கின்றன, சாக்கடைகளைப்போல் மலத்துவாராதிகளிருக்கின்றன, கூரையைப்போல் தோலும் மயிர்களும் வளர்கின்றன; இவ்வீட்டிற்கு தினந்தோறும் பழுது பார்க்கவேண்டும். ஏனெனில் ஒருநாளுணவில்லையானால், இளைத்துவிடும். கண்பஞ்சடையும். காது கேளாது, கால் சோர்ந்துவிடும். ஆனதால் தரித்திரமன்றோ-

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
யிருநாளைக் கேலென்றா லேலா-யொருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
யுன்னோடு வாழ்த லரிது.

எனக் கூறியிருக்கிறாரன்றோ. ஆனதால் இவ்வீட்டை ஒவ்வொருநாளும் பழுது பார்த்துவரவேண்டும், அதிற் குடியிருப்பவர்கள் யாரெனில் ஜீவனென்ற மஹாப்பிரபு. இப்பிரபுஎப்பொழுதும்சிற்றின்பப்பிரியர். இடைவிடாது தனது மனைவியை பிரியாமலே இருப்பார். மனையாளிட்டதே இவருக்குச் சட்டம். அவள் காலாலிட்டதை தலையால்வணங்கிக்கேட்டுகையாற்செய்வார். இவரை அவர் மனைவி, மோஹமென்னும் மருந்தைக் கொடுத்து தன் வசப்படுத்திக்கொண்டிருக்கிறாள். அவள் எப்பொழுதும் காமவெறிகொண்டகாதகி. அவள்பெயரைச்சொன்னால் உலகமெலாம் நடுங்கும், அவளாலேயே உலகமனைத்தும் மயக்கப்படுகின்றன. அச்சீமாட்டியாரெனில் மனோவதியே, அவள் தனக்காக மூன்றுதாதிகளை வைத்துக்கொண்டிருக்கிறாள். அவர்களைக்கொண்டு கணவனுக்கும் தனக்கும் வேண்டிய சுகங்களைச் செய்துவைக்கிறாள். அவர்கள் யாரெனின் புத்தி, சித்தம், அகங்காரம். இக்குடும்பத்திற் குழைப்பதற்கே இவர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள். மனோவதி என்னும் ராணி தான் நினைத்தகாரியத்தை உடனே புத்தியிடத்திற்கூறுவாள். அவள் சித்தத்தினிடத்திற் கூறுவாள். அகம்பாவமும் அதையாமோதிப்பாள். ஒவ்வொவொரு நிமிஷமும் தனது கணவனோடு சுகிக்கத்தக்க முயற்சியையே தேடுவாள். எதைக்கண்டாலும் தனக்குவேண்டுமெ

ன்று ஆசைவைப்பாள், அதைச் சம்பாதிப்பதற்குகணவனைத்தூண்டுவாள், அவர் முடிக்காத பக்ஷத்தில் அவரைப் பலவழியிலு மலைத்திருமார்திருப்பாள். எப்போதும் கணவனைத்தனது சொற்படி நடத்துவாள், நடக்காவிட்டால் தாதிகளைக்கொண்டு இம்சிக்கச்செய்வாள், அவளுக்குபத்துபுத்திரர்களுண்டு அவர்கள் கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு, கைகால், முதலியவைகளே. அவர்களை யொருபோதும் தனது கணவன், சொற்படிக் கேழ்க்க விடுவதில்லை, எப்பொழுதும் தனது புத்திரர்களை தனதுசுகத்திற் குழைக்கும்படி செய்துக்கொண்டிருக்கிறாள். இப்படியே சரீரமாகியவீட்டை இடைவிடாது பரிபாலனம் பண்ணிவருகிறாள், ஒரு சரீரத்திற்குப் பழுது வந்தால் தனது பரிவாரங்களோடு மற்றொரு சரீரத்திற்குச் சென்றுவிடுவாள். தனது புத்திரர்களை தனது சுகத்தின்பொருட்டு வெளியிலிருந்து கொண்டுவரும்படி செய்வாள். அவைகளொவ்வொன்றையும் கணவனோடு சேர்ந்து தானும் புசிப்பாள். அவரென்றைக்கேனும் இவளிடத்தில் ரமிக்காம லிருக்கக் கண்டால் தனது புத்திரர்களை ஏவவிட்டு அவர் மறுபடியும் தன்னிடத்தில் ரமிக்கும் வரையில் இம்சிக்கச் செய்வாள். அவளைப் போல் பாதகி ஓரிடத்திலுமில்லை, அவள் கெஞ்சழுத்தம் ஒருவருக்கேனுமில்லை. ஈசுவரனையுமவள் மதியாள், ஆகாசத்திற் பந்தலிட்டு இந்திர ஜாலவித்தைகளை யெல்லாம் செய்வாள். வேசிகளைப்போல் கணவனைப் பலமுறை யவமானமாகக் கூறுவாள், அந்தோ அவள்வசப்பட்டு விழிக்காத ஜீவபிரபுக்களில்லை. எக்காலத்தும் மனோவதியின் மயக்கத்தால் மாண்டவரநேகர். அவள் ஒவ்வொரு விஷயங்களிலும் ஆசையோடு பரந்துகொண்டிருப்பாள். தனதுகணவனது ஐசுவரியத்தை யெல்லாமொழித்து அவரை வெளியிற் கிளம்பவொட்டாமல் அந்தப்புரத்தை விட்டகலாமல் காவல் வைத்திருக்கிறாள். அவளிடத்தில் ஐந்து வீரர்களுண்டு. அவர்களாலேயே இக்கிரகம் காக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரண்மனைபோன்ற பெரிய வீட்டின் நவத்துவாரங்களிலுமிருந்துகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில், பிராணன், வியானன், அபானன். உதானன் இவர்களே. இவர்களிடத்தில், நாகன் கூர்மன் தேவதத்தன் முதலியோர் பணிவிடை செய்கிறார்கள். மனோவதியென்னும்ராணியானவள் ஹிருதயமென்னும் அந்தப்புரத்திலிருந்து புத்திமுதலியோர் கைகால் பிடிக்க தனது கணவனோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பாள். பிராணன் என்னும் சேவகன் எப்பொழுதும் ஜாகருகனாய் அரண்மனைக்கபாயம் வாராமற் காப்பாற்றுகிறான். அபானனென்போன் அன்னாசயத்திலிருந்து பாகாதிகளைச் செய்கிறான். உதானன் என்போன் ஆகாராதிகளை உள்ளே செலுத்துகிறான். ஸமானன் என்பான் அவர்கட்கு சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறான், வியானன் இவ்வரண்மனை முழுவதும் சுற்றிக்கொண்டேயிருக்கிறான். இவளுடைய பத்துப்புத்திரர்களும் அவர்கள்தங்களுக்குள்ள வேலைகளைச் செய்துவருகிறார்கள். எல்லோரும் தனது மாதா

ளிடத்தில் மிக்கப் பிரியமுள்ளவர்கள் அவரவர்கட்கு வேலையாதெனின்.
காது தனது மாதாவுக்கு வெளியிலிருந்து சொல்லுபவர்களுடைய வாக்கி
யங்களைக் கேட்டுக் கூறுகிறான். கண் வெளியிலிருக்கும் பதார்த்தங்களை
பார்த்து அம்மாவுக்குத் தெரிவிக்கிறான். மூக்கு அம்மாவுக்கு உயர்ந்த
வாசனைசாமான்களை கொண்டுபோய்க் கொடுக்கிறான். துவக்கு தன் கிர
கத்திற்கு வந்தவர்களையறிந்து உபசரிக்கிறான். நாக்கு தனது மாதாவிற்கு
ருசியான சாமான்களைக் கொண்டுபோய்க் கொடுக்கிறான். கால் தனது
மாதா நினைத்த விடத்திற்கு வீட்டையே தூக்கிக்கொண்டு போகிறான்.
கை தனது மாதாவிற்கு வேண்டிய சாமான்களை கொண்டுபோய்க் கொடுக்
கிறான் வாக்கு தனது மாதாகூறியதை பிறருக்குரைக்கிறான். வாயு வீட்
டின் வெளிப்புரத்தில் கெட்டசாமான்களைப் பொறுக்கித் தள்ளுகிறான்
உபஸ்தம் தனதுமாதாவிற்கு ஆனந்தத்தை யடிக்கடியுண்டு பண்ணுகிறான்
இவள் தனது புத்திரர்களை மிக்க நயமாகக் குடும்பவேலைகளை யொற்று
மையாகச் செய்யும்படியாகச் சிக்ஷித்திருக்கிறாள். அந்தோ! இந்த ராக்ஷ
ஸிவசப்பட்டு இப்பிரபு திண்டாடுகிறான். அவர் என்னசெய்வார். ஒரு நிமி
ஷம் விலகவெண்ணினால் நையப்புடைக்கிறாள். சிலசமயம்தனக்குக் களைப்
புவருமாயின் புத்திரர்களை யழைத்துக்கொண்டு தாதிகளுடன்கூட குகை
யிலொடுங்கி விடுவாள். இவனை எப்படியாவது தன் வசப்படுத்த முயன்றும்
தன்னாலாகாமல் தவிக்கிறார். இவளைச்சிலர் தன் வசப்படுத்திச் சுதந்திர
மாகவு மிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டவ்வழி நடப்போமென போக
வெண்ணினால் அதைப்பலவழியாலும் தடுத்து விடுகிறாள். ஆ! ஆ! இக்கா
தகியின் கடுமை சகிக்கப்பாலதோ! இவளிடத்தில் காமக் குரோத லோப
மோஹமென்னும் ராக்ஷஸ குணங்களிருக்கின்றன. அவைகளாலேயே
இவ்வுலகத்தையும் வெல்லுகிறான். எவ்வளவோ மகரிஷிகளும் இவளைச்
செயிக்கமுடியாமல் வருத்தமடைந்தார்கள். இவளுக்குப் பரமேசுவரனும்
லக்ஷியமில்லை, ஏதோ ஒருவரிருவர் இவளது மாயையிலிருந்து விடுபட்டா
லும் அநேகர் அலைந்துவிட்டார்கள். இந்த ராக்ஷஸியின் குடித்தனத்தை
நினைக்க நினைக்க பயத்தைக் கொடுக்கின்றது. இவள் ஒரு நிமிஷத்தை யுக
மாக்குவாள். யுகத்தை நிமிஷமாக்குவாள். ஒரு நொடியில் வெகுதூரஞ்
செல்லுவாள், இவள் வல்லமையை நம்மாற் கூறவொண்ணாது. ஆனதால்
இவளை எவ்விதத்தும் வசப்படுத்தலாமென அநேகர் யோசிக்கிறார்கள்,
அதற்காகவே வேதசாஸ்திரங்களு முண்டாயிருக்கின்றன. அதற்காகவே
துறவிகளெத்தனஞ் செய்கிறார்கள். அதற்காகவே தீர்த்த யாத்திரைசெய்
கிறார்கள். அதற்காகவே தேவாலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்
காகவே கண்மூடிக் குகைகளில் தபசு செய்கிறார்கள். எங்குசென்றாலும்
இவளுடைய வார்த்தையே கேட்கப்படுகிறது. இவளை யடக்கிவிட்டால்
நாம் சுதந்தரராய் மோக்ஷமடைந்து விடலாம், மனமடங்கில் மதியடங்

ளும் மதியடங்கில் மோனமே கூடும். அம்மௌனமே மோக்ஷமெய்பது அம்மோக்ஷமே இந்த ராக்ஷஸியின் பந்தத்தினின்று விடுதலை. ஆனதால் இம்மகாபந்தத்தினின்று விடுதலையடைய பெருங்கருணைத் தடங்கடலாகிய பரம பதியைப்பணிவாம்.

ஆரியன்,

1908-ம் வருடத்திய

இந்தியன் நாஷனல் காங்கிரஸ்

சென்னை.

இப்பெருங் கூட்டத்தையும் அதன்முழு விஷயங்களையும் எடுத்தெழுத வேண்டியது இந்தியாவினின்று வெளிவரும் எல்லாப்பத்திராதிபர்களுடைய அதிமுக்கிய கடமையேயாம். அவ்வாறு எழுத நமதுபத்திரிகை மாதப் பிரசுரமாக இருப்பதாலும் நிறம்பிய அன்பர்கள் இதற்கு முந்தியே வேறு பத்திரிகைகளிலும், செவிச்செல்வமாகவும் தெரிந்திருப்பார்கள் என்பதினாலும் விசேடமெழுதாது வெகுமுக்கியமான சில விஷயங்களை எடுத்துரைப்பாம். இம்மகாசபை 28—12—08 மத்தியான வேளையில் நமதுசென்னை நாட்டின் மவுண்ட்ரோட் எலிபின்ஸ்டன்தோட்டத்தில் அமைத்த பந்தலில் உன்னத நிலைமையில் கூடிற்று மிக்கமரியாதையுடன் வரவேற்றிருந்த கிழச்சிங்கமாகியடாக்டர்ராஷ்விகாரிகோஷ் அக்கிராசனம்வகித்தார். வரவேற்புகமிட்டியின் சபாநாயகர்,திவான்பஹதூர்K. கிருஷ்ணசாமிராவ் சி. ஐ. இ அவர்களால், அக்கமிட்டியின் பேர்கொண்டு நல்வரவு கூறியழைக்கப்பட்டு தக்க உபந்நியாஸம் செய்யப்பட்டது. பலபக்கங்களிலிருந்தும் ஸ்ரீமந். இராயபஹதூர் பெ. மா. மதுரைப்பிள்ளை முதலிய பிரபன்ன பிரமுகர்களெல்லாம் அனுப்பிய தந்திகள் வாசிக்கப் பட்டன.

ஆனரபில் ஸர்பிரோஸிஷா மேடா, மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி, ஆனரெபில் மிஸ்டர் கோபால் கிருஷ்ண கோக்கலே மிஸ்டர் எடின்ஷா எடில் ஜிவாச்சா, மிஸ்டர் ஜே-சௌதிரி, ஆனரெபில் ஜஸ்டிஸ்சங்கரன்நாயர், ரெவரெண்ட் டாக்டர் ஹியூம், முதலான அநேகம் பிரமுகர்கள் நிறைந்திருந்தார்கள். சபா

நாயகர் தமது சபாநாயகபேச்சை சாதுரியமாய்ப் பேசினார். பேசும்போது திரளாகக் கூடியிருந்தவர்கள் மிகவும் உற்சாகங்காட்டினார்கள். தமது உபந்நியாச முடிவில் சபாநாயகர் மனமுருகிக் கண்ணீர் விட்டார்.

நமது சக்ர வர்த்தியாரின் செய்தியையும் அது சம்மந்தமாய் வெளியிடப்பட்ட திருத்தங்களையும், நம்மவர்கள் பூரண திருப்தியுட னங்கீகரித்ததாகத் தீர்மானிக்கப்பட்டது. இதுமுதல் தீர்மானமாகும். இம்மகாசபையில் இருபத்தொரு விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டது. அவற்றுள் இந்தியமந்திரியாகியலார்ட்மார்லியின் திருத்தபிரரேபனை, தென்னாப்பிரிக்காவில்இந்தியர்களின் கஷ்டநிலைமை, வங்காளப் பிரிவினையைப் பற்றியது, சுதேசமுயற்சியை முன்னேறச்செய்வது, இராணுவச்செலவின் அதிகத்தைப் பற்றியது. இராணுவத்தில் இந்தியர்களுக்கும் பெரியஉத்தியோகம் கொடுத்தல், தேசப்பிரஷ்டம் செய்யும் ரெகுலேஷனை ரத்துசெய்தல், விவசாயவளர்ச்சிக்கு ஏதுவுண்டாக நீண்டகால பலத்துக்குமாறுத செட்டில் மென்ட் விஷயம், இன்னும் பற்பல விஷயங்களைத் தழுவிபேசி 30உ முடிந்தது. ஆனால் கடந்த வருடத்தில் நிறைவேறிய காங்ரஸ் மகாசபையில் நேர்ந்த அமைதியின்மையான அயோக்கிய காரியங்கள் போன்று இவ்வருடம் இச்சென்னையிலும் நிகழாமல் அபிமானத்தோடு நன்கு நிறைவேறியது சந்தோஷத்திலுஞ் சந்தோஷமேயாம்.

முதுமொழிக்காஞ்சி.

இதன் கர்த்தர் மதுரைக்கூடலூர்க்கிழார்என்பவர். இந்நூலின் பெயர்க்குப் பொருளென்னையோ வெனின் (முதுமொழி காஞ்சி) உண்மையுணர்ந்து அதனையனுபவித்து ஆநந்திக்கும் பெரியோர் அவ்வாறுணராது பொய்யை மெய்யெனக்கருதி வீணே காலங்கழித்து பிறவித்துன்பமாம் சுழலில் அகப்படும் அரும்பைப்போன்ற சிறியோரை நல்வழி திருப்பும்பொருட்டு ஜீவகாருண்யத்தை முன்னிட்டு தன்னயம் முற்றும் மறந்துசொல்லும் மொழிகளெனப் பெயராகும். ஒருக்கால் முதியோர் என்பது வயதில்முதிர்ந்தவர்க்கும் பொருளாகலின்; இங்கு வயதுமுதிர்ந்தோர் வயதில் சிறியோர்க்குக் கூறும் சொல்லென்றால்பொருந்தாதோவென்றால், முழுவதும் பொருந்தாது என்பதே துணிபு. ஏனெனில் முற்காலத்து இருந்த வயதில்

பெரியோராம் அநேகர் மிக இழிந்த காரியங்களைச்செய்து தங்கட்கும் தங்கள்குலத்திற்கும் அபகீர்த்தியை யுண்டாக்கினார்களென சரித்திர பூர்வமாய் அறிகின்றோம். இன்னும் புராணேதிகாசங்களை நம்பின் அங்ஙனம் இதற்கு சாட்சியாக அநேகங்காணலாம். ஒவ்வொரு இந்துவீட்டிலும்பெண்களும் அறிந்திருக்கும் இராமாயணமேயிதற்கு போந்தசாட்சி. அதில்பெரியவனாகிய இராவணனே பிறன் மனைவியை யிச்சித்தபோது சிறியவனாகிய விபீஷணனால் புத்திசொல்லப்பட்டும் கேளாது தன்னையும் தன் குலத்தையும் அருவறுத்துக்கொண்டதும், சிறியவனாகிய விபீஷணன் ஸ்ரீ இராமர்அநுக்கிரகமும் சக்ரவர்த்தி உரிமையும் அடைந்ததுமாக காண்கின்றோம். தற்காலத்தும் வயதில் பெரியோராம் அநேகர் பொய், திருட்டு, பயனில் சொல் விபசாரம் அதிகமாகச் செய்து தன்பிள்ளைகளை தங்களுக்கு புத்திகூறும் ஸ்திதியிலிருக்கிறதைக் காண்கின்றோம். அப்படி அவர்களை நல்வழியில்லாது கஷ்டப்பட இவர்கள் தங்களினும் சிறுவர்களுக்கு புத்திகூறுவது என்னும். அசம்பாவமே. ஆனால்இரண்டொரு வயதிற்பெரியோர் உண்மையில் பெரியோராயிருக்கலாம். அவர்கட்கு புகழ்அதிகமே. அவர்கள் சொல்லும் மறுக்கற்பாலதன்று. ஏனெனில் காயமழிந்தாலும் பொய் நினைக்க, சொல்ல,செய்ய உடன்படார்களாகலின். இக்காரணங்களைக்கொண்டு இங்கு முதியோர் என்பதற்கு உண்மையாம் அறிவிற்பெரியோர் எனப்பொருள் கூறப்பட்டது. இன்னும் பெரியோர் இலக்கணத்தை வெகுசுருக்கமாக "செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலா தார்" என நாயனாரும் குறளில் கூறியுள்ளார்.

இம்முதுமொழிக்காஞ்சியாசிரியர் தன் நூலைப்பத்ததிகாரங்களாகப்பிரித்து ஒவ்வொன்றிற்கும் பத்து சூத்திரங்களியற்றியுள்ளார். அதில் முதலதிகாரம் சிறந்தபத்து.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம் என்பதைவிவரிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கடல்சூழ்ந்த வுலகம் என்பதை எவரும் மறக்கார். ஆனால் வேறோரர்த்தமும் பொருந்துமோவென்றால் சிறிது கவனிப்பாம். கலி வஞ்சகம், போர், ஆர்நிறைந்த உலகம் என்றாலும்பொருந்துமெனநம்புகின்றேன். கலி என்பதற்கு துன்பம் எனக்கூறுவாருமுளர். வஞ்சகம் என்பது தீக்குணங்களி லொன்றாகையால் உண்மையாம். ஒழுக்கத்திற்குஎதிரியாகலின், உண்மையைச் சொல்லவந்ததற்கு காரணம் உலகம் வஞ்சகம் நிறைந்தது. உலகத்தில் உண்மையினும் அவ்வஞ்சகம் மேற்பட்டிருக்கின்றது. அத்தகைய எதிரியை ஒழிப்பது அருமையினும் அருமை ஆகவே ஜனங்களை அன்பரே ஜாக்கிறதை. அவ்வெதிரியை வெட்டும் வாள் உண்மை

நான். ஆகலின் அவ்வுண்மை நான்கண்டனுபவித்தானந்தித்த அளவுக்குச் சொல்லுகிறேன். சற்று நிதானமாய்க்கேளுங்கள் என்ன நமக்கு எச்சரிக்கைசெய்து உண்மைசொல்லத் தொடங்குவதற்காக "ஆர்க்கலியுலகம்" எனக்கூறியுள்ளார். முத்தியினுக்கு எதிர்போர் நடத்துவது உலகம் ஆவின் ஜாக்கிறதை எனக்கூறுவதும் போதும். ஆர்க்கலி (போர் நிறைந்த) உலகம் என்றார் துன்பம் என்றுபொருள் கொள்ளின் விவரிக்கவேண்டிய அவசியமின்று நேயர் அறிவர். இப்போது முதல்சூத்திரத்தையாராய்வோம்.

கற்பதினும்ஒழுக்கமுடைமை சிறந்ததுஎன்பதுபொருள். சிறந்தபத்து என்னும் அதிகாரத்தில் உலகத்திற் சிறந்த பொருளாய்க்காணப்படும் விஷயங்களில் இரண்டிரண்டெடுத்து அவ்விரண்டில் எது சிரேஷ்டமெனத் தீர்மானிக்கப் படுகின்றது. அதுபோலவும்முதல் சூத்திரத்திலும் கற்றல் ஒழுக்கம் ஆகிய இரண்டு சிறந்தகுணங்கள் எடுக்கப்பட்டு அவையில் ஒழுக்கம் சிறந்தது எனக்கூறினர்.

கல்வி சிரேஷ்டம் என்பதும் அதுவே தக்க துணைஎன்பதையும் எவரும் மறுக்கார். இதற்கு மேற்கோள்கள். அமோகமாகவுண்டு, கல்வியின் பெருமையைசுருக்கமாக "இம்மைபயக்குமா லீயக்குறை வின்றாற் றம்மை விளக்குமாற் றாமுளராக்கேடின்றா லெம்மை யுலகத்தும் யாங்காணேங்கல் விபோல் மம்மரறுக்குமருந்து" என்னும் நாலடியில் காணலாம். விரித்தெழுதில் பெருகும் இத்தகைய சிரேஷ்டமான கல்வியினும் ஒழுக்கம் சிறந்ததென்றால் ஒழுக்கத்தின் மேன்மை எவ்வளவெனநாம்சொல்லத்தரமன்று. இங்கு ஒழுக்கம் என்றால் என்ன என்பது சந்தேகம். உலகம் அநித்யமாய் உள்ளதெனக்கருதி யுழலும் மாக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஜாதிகளுக்கு சொல்லப்பட்டிருக்கும் பொய்வேடமா? அல்லது போலிசைவர் வைணவர் செய்யும் அதிக ஜல ஸ்நானம்செய்தல், பொருளறியாது விபூதி திருமண்தரித்தல், உண்மைவேண்டாம் எனமறுத்து உருத்திராக்கம் துளசிமணிபூணல், மாம்சம் புசித்தல் ஜீவகாருண்யம் அல்லவென வெளிக்குச் சொல்லிதாழ்ந்த ஜாதியெனப்பொய்யாகச்சொல்லப்படும் பறையன் உயிர் போகுந்தருணத்தில்தன்வீட்டண்டைவந்துவிழநேர்ந்தால்கூடமானபோதும் பறையனைத்தொட்டால்தீட்டு பூணூல்கெட்டுபோகும் எனச்சொல்லிதன் கதவைமூடிக்கொண்டுமௌனமௌன வெனவாயசைத்து ஒன்றும் வேண்டாத கடவுளுக்குலஞ்சம்கொடுப்பதாகசொல்லிக்கொள்ளுதலாகிய இவைகளா? இவைகள்தான் எனவாய்ஞானம்பேசி, ஜாதியைஸ்திரப்படுத்திதன்னைகௌரவப்படுத்திகொள்ளவீணேமுயற்சித்து தனக்காறுதலில்லாபோலிபடிப்பாளிகள்மிருகத்தினுங் கடையர். அவர்கள்சேரும் மோட்சத்தை அவர்கள் ஒருக்காலும்அடையப்போகிறதில்லைஅடைவதென ஒன்றிருந்தாலும்கூட அடைய மாட்டார்கள். இது சத்தியம் விவேகிகளறிவர். ஆனால் ஒழுக்கம் என்றால் என்ன வெனில் உண்மையாம் பெரியோர் அனுபவ

தால் அடைந்துசொல்லிய உண்மையாம் வாக்கியங்களின்படியும் சுருதி யுக்திஅனுபவாதிக்கு முரண்படாதபடியும் நடத்தலுமே என அறிக. உண்மையாம் பெரியோர் உண்மை சொல்லியிருக்கின்றார்கள் நாம் அவைகளை வாசிக்கிறோம் வாசித்த அளவுக்கு நிற்றலே ஒழுக்கம். வாசிப்பதும் எப்படிப்பட்டதை வாசிப்பது என்றால் "கற்க கசடற கற்பவை" என்றார் பெரியோர். கற்பவை என்றால். எது அலகுசால் கற்பினறிவுநூல் என்பதே ஆகவேஅறிவு நூற்களை வாசிக்கவேண்டும் வாசித்தாலும் அதன்படி (அதாவது அறிவுமயமாய்) நிற்றல்வேண்டும் இதற்காகத்தான், வள்ளுவர் கற்பின் நிற்கவதற்குத்தக என்றும் கூறியுள்ளார் அறிவுமயமாய் நிற்றற்கு உண்மைவேண்டும். உண்மை முதிர்வதற்கு ஜீவகாருண்யம் பொய்யின்மை, திருடாமை பயனிலசொல்லாமை முதலிய வேண்டும்இப்படி வேண்டுமெனவும் வாசிக்கின்றோம் அப்படிவாசித்தலினும், உண்மையாம் அறிவாயமர மேற்சொல்லியவாறு ஒழுக்கம் வேண்டும் இதனையன்றோ தாயுமானவர் "கற்றதுவுங் கேட்டதுவு மேதுக்காக கடமென்றுநந்திதற்கோ கல்லாலெம்மான், குற்றமற குறிகாட்டுங் குணத்தைக்கொண்டு குணங்குறியற்றின்பநிட்டை கூடவன்றோ என்பதால் வற்புறுத்தியிருக்கின்றனர். இப்பாட்டிற்கு மூக்கைப்பிடித்துக்கொண்டும் விரலைமடக்கிக்கொண்டும் தலையைநிமிர்த்திக்கொண்டும்ஊருக்குபாரமாயிருக்கும் நிட்டையெனபொருள்கொண்டுதடுமாறுவாருளர். இருந்தாலும் இவர்கள் நிட்டை இன்பநிட்டை யாகாது துன்பநிட்டையேயாகும் வேண்டுமென்றால் அன்பர்பரிட்சித்துபார்க்கலாம் இன்னும்நாயனார், மறப்பினுமோத்து கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும் "என்றார் இங்குபார்ப்பான் என்பதற்கும் பிறப்பொழுக்கம் என்பதற்கும் விபரித அர்த்தம் செய்யாதிருக்கவேண்டுகின்றோம். சிறிது கவனித்தால் முன்சொல்லிவந்ததை இக்குறளும் நிலை நிறுத்தும்இக்குறளால் ஜாதிவேற்றுமை நாயனார்க்கு சம்மதமென ஏமாறவேண்டாம்.

(தொடரும்)

விகட விநோத விஜய வியாஸம்.

ஜப்பான் தேசத்திலிருந்து கல்கட்டாவுக்கு இந்திய வியாபாரமாக பெரும் வியாபரம் நடக்கிறதெனத் தெரிந்தமான்செஸ்டர் வியாபாரம் கடவுளை நோக்கி உன்கோயிலிடியாதா? கொல்லத்துகார் பிழைக்க மாட்டார்களா? நாங்கள் வரும்படி யின்றியிருக்கிறோமே யென்று கூச்சலிடுகிறதாம்.

தைமாதம்பிறந்ததும், அரிசிவிலையேற்றமாகவேஊர் தை-தைதை யென்று குதிக்கிறது. பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு வ

ழைகளை வாயிலடிக்கும் பேராசை வியாபாரிகளுக்கு காலந்தவிராமல் நாலெட்டுறை கொடுத்து ஒன்றே முக்கால் தைமீதேற்றி பவுனிகொண்டுவர விகடகவர்ன் மெண்டில் தீர்ப்பானது.

ஞானம், நாகரீகம், கல்வியுயர்ந்து பழயகட்டுக் கதைகளைத் தள்ளி வேற்றுமையின்றி சென்னைமுதலிய நகரங்களில் சமபோஜன முதலியவைகள் நடக்கிறதைக்கண்ட சிலர் ஜாதிபேதமின்றி சமபோஜனம் பண்ணப்பட்டவர்களுக்கு குடல்குந்தானி போலாகிவிட இரிச்சாத்தானுக்கு கப்பணங்கட்டி யிருக்கிறார்களாம்.

லார்ட் மின்டோ அவர்களுடைய கவர்னர் ஜெனரல் ஸ்தானத்திற்கு சிறு பிராயமுள்ள வின்ஸ்டன் சர்ச்சில்வருவதாக வதந்தியுலவுகிறதுஎன்றும், இவ்வாறே லார்ட்கர்ஸனும் சிறுபிராயமுள்ளவராதலால் பங்காள பிரிவினையினால் இந்தியா கலகப்பட்டிருப்ப தாகவும் தெரிந்து அவ்வாறு வரும் சிறுபிராயத்தினரை வாலீபரென்று தெரியவொட்டாமல் நரைத்தமயிர்நரைத்த தாடி யுண்டாக்கிவிட மருந்து வேண்டி பொதியமலைச்சித்தருக்கு கம்பியில்லாத்தந்தி அனுப்பப் பட்டிருக்கிறது.

1909 வருஷத்திய காலெண்டர் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் பல வர்ணங்களால் அச்சிட்டிருக்கிறோம். வேண்டுவோர் கீழ்கண்ட விலாஸத்திற்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் இலவசமாக அனுப்பப் படும். தங்கள்விலாஸத்தை விபரமாகஎழுதியனுப்பவும்.

விலாஸம்
பிரின்ஸ் அண்டு கம்பெனி.
இராயபுரம்,
சென்னை.

சமாசாரக் கொத்து.

(ஃ)

திருவநந்தபுரம் கலகக்கேஸ்களின் தீர்ப்பு.

திருவனந்தபுரம் கலகக்கேஸ்களில் இவ்வூர் ஸெஷன் ஜட்ஜி தீர்ப்பு சொல்லிவிட்டார் 69 கைதிகளில் 4பேருக்கு3 வருஷக்கடுங்காவலும் ரூபா 1000 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது, பி ஏ பட்டதாரியாகிய பத்மநாத அய்யங்காருக்கு 3 வருஷகடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டிருக்

கிறது ஒரு மகமதியனுக்கு இரண்டு குற்றங்களின் மேல் 5 வருஷக் கடுங் காவல் தண்டனையும், வேறே 16 கைதிகளுக்கு 2¼ வருஷம் கடுங்காவல் தண்டனையும், பின்னும் 34 பேருக்கு 2 வருஷம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கின்றன. 6 சிறுவர்கள் சிறைக்கல்விச் சாலைக்குப் போகவேண்டுமென்ற தீர்ப்பாயிருக்கிறது. 7 பேர்விடுதலையடைந்தார்கள்.

இங்கிலாந்தில் கிழவர்களுக்குப் பென்ஷன்.

இந்தவருஷம் ஆரம்பம் முதல் இங்கிலாண்டு தேசத்தில் கூலிவேலை செய்து பிழைத்தவர்களாய் கிழத்தனத்தால் வேலை செய்ய இயலாதவர்களுக்குக் கவர்ன்மென்ட்டு பொக்கிஷத்திலிருந்து பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. முதல் மந்திரி மிஸ்டர் ஆஸ்குவித் ஆரம்பத்தில் இப்படிக் கொடுப்பதால் மொத்தம் 9 கோடி ரூபாய் செலவாகுமென்று திட்டம் போட்டாராம். இப்போது அனுபோகத்தைக் கொண்டு அதிக்கமட்டில் இது 1909ம் வருஷத்தில் 12கோடியாகுமென்று நினைக்கப்படுகிறது. இந்த இனத்தில் செலவு இவ்வாறு அதிகப்பட்டுப் போவதால், பிரிடிஷ் பொக்கிஷத்தில் வருஷக்கடைசியில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் குறை வேற்படுமென்று நிதானிக்கப் படுகிறது.

ராயபுரம் தர்ம அன்னசாலை.— இதை யடுத்துள்ள இரண்டு பறைச்சேரிகளிலும் 70 சிறுவர்கள் சோம்பேறிகளாய்த் திரிந்துகொண்டிருப்பதினால் சிறுவர்களுக்கே யன்றி சிறுமியர்களுக்குமாக இரண்டு பாடசாலைகளமைக்க ஷை சாலையார் முயற்சி நடந்தேறுவதில் தருமசகாயம் வேண்டுவதால் முனிஸிபல் கார்ப்பரேஷனாரும், போர்ட்டிரஸ்டாரும், வித்தையிலாகாதாரரும் ஆரம்பத்தில்கொட்டகை கட்டிக்கொள்ளவும், டிரெயினிங்கில்லாத டீச்சர்களை வைத்துக்கொள்ளும் படியாயும் உத்திரவளிக்கக் கேட்டிருக்கிறதாய்த் தெரிவது சந்தோஷகர மானதாகும்.

ஓர் அமெரிகன் பெலூன்காரர்:—காப்டென் லாரென்ஸ் இங்கு வந்திருக்கிறார். இவரோ வேல்ஸிளவரசர் இந்தியா விஜயம்செய்தகாலத்திலிருந்து இதுவரையில் சுமார் 140 ராஜாக்களிடம் புகைக் கூண்டு வேடிக்கை காட்டி வந்திருக்கிறபடி யிங்கும் செய்வதா யிசைந் திருக்கிறதாகத் தெரிகிறது.

ஜஸ்டிஸ் மித்னிரா.

கல்கட்டா ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் ஜஸ்டிஸ் சாத சரண மித்திரா தம்முடைய வேலையை ராஜிநாமா கொடுத்ததாகவும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜுகளாயிருக்கக் கூடாதென்ற விதியைக் கண்டித்துக்காட்டும் நோக்கத்தோடு அவர் தமக்குப் பென்ஷன் வேண்டியதில்லை யென மறுத்திருப்பதாகவும் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

பண்டிதை சுந்தரம்மாள்.

மைசூர் சமஸ்தானத்தார் பண்டிதர் என்ற வித்வத் பட்டம்கொடுப்ப தற்காக நடத்திய சமஸ்கிருத பரீட்சையில் சுந்தரம்மாள் என்ற ஸ்திரீ அப் பரீட்சையில் தம்முடன் பரீட்சிக்கப்பட்ட புருஷர்களிலும் முதன்மையா யத் தேறியிருப்பதாய்த் தெரிந்து சந்தோஷிக்கிறோம், அந்தசமஸ்தானத் து பண்டித பரிக்ஷையில் தேறிய முதல்ஸ்திரி இம்மாதே யாவள்.

9–வயதுடையன்மேல் ராஜத்துவேஷக் கேஸ்.

ராஜத்துவேஷ உணர்ச்சியைத் தூண்டிக் கொடுக்கும் மாத்ரு பூஜா என்கிற புஸ்தகம் ஒன்றைப் பிரசுரித்ததற்காக 9-வயதுப் பையன் ஒருவன் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறான் அவன் தம்முன் ஆஜர்ப்படுத்தப் பட்ட போது கல்கட்டா சீப்பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் இந்தச் சிறுவன் எப்படித்தான் பப்ளிஷர் என்று உறுதிமொழிச்சீட்டு எழுதிவைக்க உத்தர வு கொடுக்கப்பட்டானோ வென்று ஆச்சரியப்பட்டாராம்.

ஒரு கிறிஸ்தவமாது ஹிந்துவைக் கலியாணஞ் செய்து கொண்டாள்.

ஹிந்துக்கள் வேதத்தில் சேர்ந்து விடுவதைப்பற்றி, அதாவது கிறிஸ் துவமதத்தைத் தழுவி விடுவதைப்பற்றி, நேயர்கள் அடிக்கடிக் கேள்விப் பட்டிருப்பார்களே யல்லாமல் கிறிஸ்துவர் ஹிந்துவானதைப் பற்றிக் கேள் விப்பட்டிருக்க மாட்டார்கள். சிலதினங்களுக்கு முன்னே வைத்தியத் தொழில்செய்யும் கிறிஸ்து மாதொருத்தி ஐக்கியமாகாணத்தைச்சேர்ந்த கான்பூரில் ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள்பார்த்து சந்தோஷிக்க ஹிந்து மதத்தைத் தழுவி புதாவான் என்ற ஊரில் சிவில் அஸிஸ்டண்ட் சர்ஜன் வேலைபார்க்கும் ராம சொரூப்பென்ற ஹிந்து ஒருவரை ஹிந்துக்கள் அனு சரிக்கும் கலியாண முறைகளை அனுசரித்துக் கலியாணஞ் செய்து கொண் டாள் என்று சொல்லப்படுகிறது.

ஒரு ஜோதிஷக் குறிப்பு.

பண்டித ராம நாராயணரென்னும் ஒரு யோகசாஸ்திரியார் பம்பாயி லிருந்து பின் வருமாறு வெளியிட்டிருக்கிறார்:— இன்னும் ஆறுமாசத்தில் எட்வர்ட் மஹாராஜாவுக்கு விபத்து விளையலாகும். லார்ட்மின்டோவினும் மிக்க நல்லவரான வைஸ்ராய் வந்து சேர்வார். ஸ்ரீ திலகர் வரும் ஏப்ரல் மாதம் 22ந்தேதி விடுவிக்கப்படுவார் மே மாசங் கழிவதன்மேல்வேல்ஸின வரசருக்கு அதிர்ஷ்ட சம்பவமாகும் வரும் ஏப்ரல் மாதம் 22-ந் தேதிஉலக முழுமையும் நடுங்கும்படியான பயங்கர பூகம்பம் உண்டாகி யிதுவரையி லுங் கேட்டிராத சேதங்கள் நேர்ந்துவிடலாகும் பம்பாயில் பிளேகென்

பதுபோம் மூதேவி ரோகம் வலுத்தவரும் அன்றியும் இவ் வருஷத்தில் துருக்கி, பெர்ஷியா, ஜெர்மனி, இங்கிலாண்டு முதலிய பல பவர்களும் பெரும் போருக்கு முற்படும்.

ஆக்ராவில் ஒரு போலீஸ் இனிஸ்பெக்டர்மேல் மானநஷ்ட வழக்கு.

ஆக்ராவிலே கொஞ்ச நாளைக்கு முன்னே ஹாகிம். கயான் சிங்க் என்ற ஒரு ஜமீன்தாரை ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்தான் சர்க்கார்வேலை மேலிருக்கும்போது தாக்கியதற்காகப் பிடித்துக் கைது செய்துவிட்டார் அச்சமாசாரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அந்த ஜமீன்தாருக்கு வேண்டியவர்கள்போய் அவரை ஜாமீன்மேல் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவரைஜாமீன் மேல் விடவில்லை: அதன்மேல் அந்த ஜமீன்தாரைச் சேர்ந்தவர்கள் போலீஸ் சூபரின்டென்டைப் போய்ப் பார்த்துச் சமாசாரங்களைத் தெரிவிக்க அவர் ஜாமீன்மேல் விடப்பட்டார். ஆனால் அந்தக்கேஸ் விசாரணையானதில் ஜமீன்தார் குற்றவாளியல்லவென்று தீர்ப்பாயிற்று. கேஸ் அவ்விதமுடிவை யடைந்ததும், அந்த ஜமீன்தார் ஆக்ரா சப்ஜட் கோர்ட்டில் தம்மைப் பிடித்துக் கைது செய்த போலீஸ்:இன்ஸ்பெக்டர் மேல் ரூபா 1500-க்கு மானநஷ்ட வியாச்சியஞ் செய்திருக்கிறார்.

சீக்கிரம் எழுதிக்கோண்டால்தான் புத்தகம் கிடைக்கும்.

சோபனவீட்டில்

சுகமிழந்த சுந்தரியின்கதை.

ஆண்பெண் இருபாலரும் படித்துப் பேரானந்தமடையக்கூடிய சிறந்தகதை இதுவே! இதுவே!!

இக்கதை எளிய செந்தமிழ் வசனநடையில் இங்கிலிஷ் நாவல்களைப் போல நூதனமாக எழுதப்பட்டது, இதை வாசிப்போர்கள் கற்கண்டும், கனிரசமும், தீம்பாலும் ஒன்று சேர்த்து உண்டதுபோலச் சந்தோஷிப்பர் சோபனவீட்டில் நடக்கும் கதையாதலால், அங்கேநடக்கும்அதிசயகாக்ஷிகளையும் தந்திரங்களையும், இன்டங்களையும் பற்றி இங்கே எழுதமுடியாது. இக்கதையை வாசிக்கும்போது, சோபன வீட்டில்நடக்கும்இன்பரசங்களை நேரிற்கண்டு அநுபவிப்பதுபோலிருக்கும். இதை படிக்கும் ஸ்திரி புருஷர்களுக்கு நல்லறிவும். யோசனை சக்தியும், புத்திகூர்மையும், உண்டாகும் சுருக்கமாகக் கூறுமிடத்து, ஆநந்தத்தையும் விடாநகைப்பையும்உண்டாக்கக்கூடிய கதை இதைவிடஉலகத்திலவேறொன்றில்லையென்றே துணிந்து சொல்லலாம்.

இதன் விலைபுத்தகம் 1-க்கு அணா 0-8-0
போஸ்டேஜ் அணா 0 2 0

எம். இராமலிங்க முதலியார்.
30, பாஷ்யகார்லு நாயுடு வீதி,
மின்ட்போஸ்ட், சென்னை.